18th July 1962]

திரு. வை. சங்கரன் : வேண்டியவர்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, இருக்கிற தொகைக்கு மேல் அதிகமாக மாணவர்கள் ஆங்கில போதனை மொழியில் படிக்க விரும்பினால், இப்படிப்பட்டவர்களை அதில் சேர்க்கவேண்டும். அல்லது எந்த முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதுபற்றி விதிமுறை அமைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மீண்டும் சொல்லுகிறேன். இதிலே சேர்ப்பது ஒன்றுமில்லை. இந்த வசதி அளிக்கப்படுகிறது. அந்த வசதியை வேண்டியவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

வெலிங்டன் நீர்த்தேக்கம் (மராமத்து செய்தல்)

* 391 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (திரு. இரா. நாராயணன் சார்பாக) :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து வெலிங்டன் ரிசர்வாயரை (எமனேரி) மராமத்து செய்ய உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், எப்போது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : வெலிங்டன் ரிஸர்வாயரில் அதிகமாக வண்டல் படிந்துவிட்டதினால், அந்த ஏரியில் தண்ணீர் கொள்ளாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், சீக்கிரம் மண்ணை வாருவதற்கு உண்டான நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. வி. ராமையா : அதில் ஏராளமான ஸில்டு இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால், இந்த ரிஸர்வாயர் சம்பந்தமாக நல்ல மராமத்து வேலைகள் நடக்க வேண்டுமென்றால், இப்பொழுது இருக்கக்கூடிய நிலையிலே ஆயக்கட்டுக்குப் போதுமான அளவுக்கு தண்ணீர் கட்டியிருக்கிறது. அதோடு இல்லாமல் என்னிடம் இருக்கக்கூடிய விவரப்படி, அந்த ரிஸர்வாயர் எத்தனை ஏகருக்குப் பாசன கொடுக்கத் திட்டம் போடப்பட்டிருக்கிறதோ, அந்த ஏகரேஜ் இன்னும் பூர்த்தியாகவில்லை. இந்த ரிஸர்வாயரைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய முறையிலே எப்படி அதை முறையாக வைத்துக்கொள்ள வேண்டுமோ அதற்கு வேண்டிய கவனம் அரசாங்கம் செலுத்திக் கொண்டுதான்வருகிறது.

திரு. ர. ஜீவரத்தினம் : கனம் சபாநாயகர் அவர்களே இதிலே தமிழிலே எமனேரி என்று போட்டிருக்கிறது. இது எமன் ஏரியா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமையா : இப்பொழுது நடைமுறையில் அதற்குப் பெயர் வெலிங்டன் ரிசர்வாயர்.